காலணு Regd. No. M. 2811


சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும் ஆசிரியர் :
வருட சந்தா 4½ ரூபா சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

காரியாலயம் : பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 30-1-33

மூளையிலே கட்டிடங்கள்



ஊரை ஒழுங்காக ஆள ஒரு சட்ட சபை போதாதா? இரண்டு சட்ட சபைகளை வைத்து ஒன்றை யொன்று தாக்கிக் கொண்டு கடைசியில் எல்லாம் குட்டிச் சுவராக வேண்டு மென்று சில பிரகஸ்பதிகள் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கின்றன. வட்ட மேஜை வீரர் ராம சாமி முதலியார் தலையிலும், ராஜாங்க சபை செட்டியார் மூளையிலும் 'பிரபுக்கள் சபை' என்ற கட்டடங்கள் ஸதா சுழன்று கொண்டிருக்கின்றன. இந்தக் கட்டிடங்கள் எப்போதும் காலி யாகவே கிடக்க வேண்டு மென்பது தேச பக்தர்களின் ஆசை.

மூன்று முனை மூன்று குளம்

மூன்று முனையிலே
  மூணு குளம் வெட்டினேன்
ரெண்டு குளம் பாழ்; ஒன்றில்
  தண்ணியே யில்லை

என்ற சாலைப் பாட்டு நமது ஞாபகத்துக்கு வருகிறது. மூன்றாவது வட்ட மேஜையில் ஆராய்ச்சிக்கு வந்த முக்கியமான விஷயங்கள் மூன்று :

1. பண விவகாரம்.
2. இராணுவ அதிகாரம்.
3. ஐக்கிய அரசியல் அமைப்பு.

இந்த மூன்று விஷயங்களிலும் 'இந்தியப் பிரதிநிதிகள்' எவ்வளவு தூரம் அங்கு பிரிட்டிஷாரோடு 'சண்டை' போட்டு 'வெற்றி' யடைந்தார்கள் என்று கவனிக்கப் போனால் மூன்றிலும் கோட்டாவியே விட்டு விட்டு வந்திருக்கின்றார்கள்.

சமீபத்தில் வட்ட மேஜைக்குச் சென்றிருந்த ஓர் மூட்டை பம்பாயில் இறக்குமதியா யிருக்கிறது. ஆங்கிலோ இந்தியர்களின் பிரதிநிதியாகச் சென்ற கர்னல் கிட்னி தமது அநுபவத்தை அங்கு அவிழ்த்திருக்கிறார்:

"1. பிரிட்டிஷ் இந்தியா—சமஸ்தானங்கள் சம்பந்தமான பண விவகாரங்களில் பலமான அபிப்பிராய பேதங்கள் ஏற்படவே அதன் முடிவை பிரிட்டிஷ் சர்க்காருக்கு விட வேண்டியதாயிற்று. 2. இராணுவ அதிகார விஷயத்திலும் வாக்கு வாதம் பலமாயிருக்கவே அவ்விஷயம் கவர்னர் ஜெனரலின் கையிலிருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. 3. ஐக்கிய அரசியல் அமைப்பு பற்றி விவாதம் நடந்தது. பிரிட்டிஷ் இந்திய அரசியலுக்கு சீக்கிரத்தில் இந்தக் 'கல்யாணம்' நடைபெறுமென்று நினைப்பதற்கில்லை. பெரும்பாலான பிரிட்டிஷ் ராஜிய வாதிகளுக்கு இந்தியாவைப் பற்றிய விஷயங்கள் தெரியவே தெரியா தென்பதையும் நான் கண்டேன்" என்று அந்தப் பேர் வழி கூறி யிருக்கிறார்.

"ஆனால் மொத்தத்தில் இந்த வட்ட மேஜை மகாநாடு வெற்றிகரமான தென்றே சொல்ல வேண்டும்." என்று அவர் ஒரு முத்தாய்ப்பு வைத்திருப்பது வேடிக்கையா யிருக்கிறது. 'வெற்றி' என்றால் யாருக்கு வெற்றி? அல்லது 'வெற்றி' யென்பதற்கு, கர்னல் கிட்னியின் அர்த்தமே வேறே என்னவோ யார் கண்டது?

கௌரவமா? கர்வமா?

சர்க்காருடைய கௌரவத்தைக் காக்கவே தாங்கள் அவதரித்திருப்பதாக நினைத்துக் கொள்ளுகின்ற ஜன்மங்கள் சில உண்டு. அதற்கு உதாரணமாக லாகூரிலின்று ஒரு மாஜிஸ்திரேட்டைப் பற்றிய செய்தி ஒன்று வந்துளது. "டிரிப்யூன்" என்ற பத்திரிகை அவரைப் பற்றிய கதையை பின்வருமாறு சொல்கிறது: ஒரு மாஜிஸ்திரேட், ரயில் வண்டியில், ஸ்திரீகள் உட்காரும் அறையில் உட்கார்ந்து கொண்டு, ரயில்வே கார்டும், இதர ரயில்வே உத்தியோகஸ்தர்களில் பலரும் எவ்வளவோ சொல்லியும் அந்த இடத்தை விட்டு நகர மறுத்து விட்டார். புருஷர்கள் உட்காரும் முதல் வகுப்புத் தனியறை ஒன்றை அவருக்குக் கொடுப்பதாகவும் சொல்லப்பட்டது. ஆயினும் அவர் அசையவில்லை. "என்னை யார் என்று நினைத்துக் கொண்டு விட்டீர்கள்? நான் மாஜிஸ்திரேட்டல்லவா? ஒருதரம் உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருந்து வேறொரு இடத்தில் உட்கார்ந்தால் அது எனக்குக் கௌரவக் குறைவல்லவா? அதனால் கவர்ன்மெண்டின் கௌரவமுமல்லவா குறைந்து போய் விடும்?" என்று அவர் வாதித்தாராம்.

ரயில்வே சட்டங்களை மீறிய அந்தப் பேர் வழியின்மீது ரயில்வேக்காரர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டனர் என்பது தெரியவில்லை. ஆனால் போலீஸார் பிறகு அவரை அப்புறப் படுத்தியதாகச் செய்தி கூறுகிறது. "ஏதோ தெரியாமல் ஸ்திரீகள் அறையில் வந்து உட்கார்ந்து விட்டேன்" என்று சொல்லி, மரியாதையாக எழுந்து போவதை விட்டு விட்டு அனாவசியமான வார்த்தைகளைப் பேசுமாறு அவரைத் தூண்டியது "கௌரவமா" அல்லது "கர்வமா" என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்!

ஓர் வியாசப் போட்டி

"தீண்டாமையும், அதை ஒழிக்கும் மார்க்கமும்" என்ற பொருள் பற்றி தமிழ் மாணவர்களால் எழுதப்பட்ட சிறந்த மூன்று கட்டுரைகளுக்குப் பரிசுகள் தரப் போவதாக வட ஆற்காடு ஜில்லா தீண்டாமை விலக்குச் சங்கக் காரியதரிசி அறிவிக்கிறார். பிப்ரவரி 15உக்குள் வியாசங்களை எழுதி முழு விலாசத்தோடு பாரத நிலயம், ராணிப்பேட்டைக்கு அனுப்பி விட வேண்டும்,

பரீக்ஷையில் 'பல்டி'கள்

உத்யோக வேட்டைக்காரர்களுக் கென்று சர்க்கார் நடத்திய பரீக்ஷையில் பிள்ளைகள் அசடு வழிந்த விதத்தை இதற்கு முன் 'சங்கில்' காட்டினோம். இன்னும் சில கேள்விகளுக்கு மாணவர்கள் தந்திருக்கும் அழகான (?) பதில்களைக் கீழே தருகிறோம் :—

கேள்வி :—“ காக்னீல் ” (Cochineal = தம்பலப் பூச்சி) என்றால் என்ன ?

பதில்கள் :—கொச்சி மகாராணியின் பெயர்; கொச்சியில் காணப்படும் நாய்கள் ; கொச்சியிலுள்ள ஒருவரது பெயர் ; கொச்சி ராஜாவுக்கு போர்த்துகேயர் அளித்த பட்டம் ; மலையாளத்தில் காணப்படும் ஒரு பூச்சி ; இப்பொழுது வனாந்திரங்களில் வசிக்கும் ஆதி கொச்சி ஜனங்கள் ; ஒரு வெள்ளைப் பூச்சி, இது தோலின் மீது உட்காருவதால்தான் ஐரோப்பியரின் தோல் வெள்ளையாகி விடுகிறது ; கொச்சியில் பிரியமான பெண் குழந்தைகளின் பெயர் ; கொச்சியில் விபசாரிக்குப் பெயர் ; தேவதாசிக்குப் பிரியமான பெயர் ; ஸர் வால்டர் ஸ்காட் என்ற ஆங்கிலக் கவியின் பாட்டுகளில் வரும் ஸ்காட்லண்டுத் தலைவனின் பெயர் ; ஸ்காட்லண்டில் பெயர் பெற்ற ஏரி ; கொச்சின்-சீனாவிலுள்ள பூரேஷ்யர்களின் பெயர் ; ஆப்பிரிக்கப் பக்ஷி ; யானைக் காலுக்குக் காரணமாகவுள்ள ஒரு பூச்சி ; வைரத்தாலான இந்த மயிலாசனம் டில்லியில் வைக்கப்பட்டிருந்தது ; கொச்சியில் செய்யப்படும் ஆயுர்வேதத் தைலம்; கொச்சி ராஜாவின் மூத்த பிள்ளையின் பெயர் ; நீலகிரி ஜில்லாவிலுள்ள ஒரு பெரிய பறவை.

இப்படியாக மாணவர்கள் உளறிக் கொட்டியிருப்பதற்குக் காரணம் அவர்களிடம் உலக அறிவு என்பது துளி கூட இல்லாததே யாகும். தம்பலப் பூச்சி இன்னதென்பதை அறியாத இதே ரஸிகர்கள் தினம் லக்ஷக் கணக்கில் கட்டி விற்கப்படும் “பீடாக்களை” மெல்லுகின்றனர். தம்பலம் தின்பதில் சுவையே யன்றி தம்பலப் பூச்சியைப் பற்றி அறிய சாவகாசமில்லை போலும்! சம்ஸ்கிருதப் பழக்கம் சிறிதாவது இருந்தால் இந்தப் பூச்சி இந்திரனுடைய சாபத்தினால் ஏற்பட்டது என்ற கதையையும், “இந்திர கோபம்” என்ற பெயர் அதற்குண்டு என்பதையும் கேட்டிருப்பார்களன்றோ? இந்த அசடுகளின் மற்ற பதில்களையும் பார்ப்போம்:

கே: 'ஸ்னைப்' (Snipe = உள்ளாங் குருவி) என்றால் என்ன ?

ப : எலும்பில்லாத புழு ; ஒரு விஷப்பாம்பு ; சமுத்திரக் கரையிலும், குளங்களிலும் காணப்படும் உயிரற்ற ஜந்து ; விரைவில் படமெடுக்கும் காமிரா ; ஐரோப்பியர்கள் கலியாண இரவன்று புசிக்கும் ஆகாரம் ; நன்றாகக் குறிபார்த்து சுடுபவனின் பெயர் ; மணல் பிராந்தியங்களில் காணப்படும் விஷ ஜந்து ; ஸோல்ஜர்களுக்குள் வழங்கிவரும் வசைச் சொல் ; வீடுகளில் பழக்கினால் பாம்பின் கொடிய விரோதியாகிறது ; புத்தகங்களை அரித்துத் தின்னும் செல்லுப் பூச்சி ; பிரேஸில் தேசக் காடுகளில் காணப்படும் குரங்கைப் போன்ற மிருகம் ; சீமைப் பழத்தின் பெயர் ; ஓர் சிறுத்தைப் புலியின் பெயர் ;

கே : “ ஹூக்வோம் ” (Hook worm = கொக்குப் புழு) என்றால் என்ன ?

ப : மீன் பிடிக்க உபயோகிக்கப்படும் ஒரு பூச்சி ; புத்தகப் புழு போன்று எனச் சொல்லத் தக்க வகையில் எப்போதும் படிக்கு மியல்புடைய படிப்பாளிக்குப் பெயர் ; உள்ளங்கால் வழியே கொடிய நோயைப் பரப்பும் பூச்சி ; காலராவை யுண்டுபண்ணும் கிருமி ; மின்மினிப் பூச்சி ;

கே: ஆஸ்டிரிச் (Ostrich = நெருப்புக் கோழி) என்றால் என்ன ?

ப : நெருப்பை வெளியிட்டு, அதையே சுவாசிக்கும் பக்ஷி ; பெண் ஒட்டகத்தின் பெயர் ; ஜப்பான் தேசத்தில் காணப்படும் மீன் ; கல்லைத் தின்று ஜீவிக்கும் காட்டுப் பறவை ;

கே : ஜீப்ரா (Zebra = கோவேறு கழுதை) யென்றால் என்ன ?

ப : கடலில் வசிக்கும் மிருகம் ; விஷப் பாம்பு ; நீலநதியில் வசிக்கும் ஒரு நீர்ப்பிராணி; பனிக்கட்டிப் பிரதேசங்களில் காணப்படும் பிராணி ; புராணங்களில் சொல்லப்பட்டுள்ள நீர்க் குதிரை; ஹிமயமலையில் வசிக்கும் மிருகம்.

இம்மாதிரி ' கன்னாபின்னா 'வென்று பிதற்றிய முட்டாள்கள் பரீக்ஷையில் ' பல்டி ' யடித்தார்கள் என்றால் அதற்கு யார் மீது கோபித்துக் கொள்வது? ஆயுளில் 16 வருடங்களை கல்லுக் கட்டிடங்களில் குந்தி கற்றுக்கொண்ட அந்த அபூர்வ ஞானத்தைத்தான் குறைகூற வேண்டும். சாமானிய அறிவு (Common Sense) துளிக் கூட இல்லாத இப்பிள்ளைகளுக்கு உத்யோகம் வேறு தேவையோ ?

நமது குறிப்புகள்

இது பட்ட தசை !

சனி தசை, சுக்ர தசை, முதலிய தசைகளைப் போல இப்போது செட்டி நாட்டுக் குமார ராஜாவுக்கு இது 'பட்ட தசை'. சென்னைக் கார்ப்பொரேஷனின் தலைவரா யிருந்த அவருக்கு திடீரென்று 'மேயர்' என்ற பட்டம் கொடுப்பதென்ற தீர்மானம் சென்னை சட்ட சபையில் நிறைவேறி விட்டது. இனிமேல் அவரை 'மேயர் குமாரராஜா' வென்று தான் அனைவரும் கூப்பிட வேண்டும். மேயப் போகின்ற மாடு கொம்பில் புல்லுக் கட்டிக் கொள்ளுமா? மேயராகிப்போன குமார ராஜாவுக்கு இனி மேல் பட்டங்களுக்கென்ன குறைச்சல்? பதவிக்குக் கென்ன பஞ்சமா? மேயர், அப்புறம் செரீப்பு, அப்புறம் ஸர், மந்திரி பதவி எல்லாம் கிடைக்குமாம். அவர் தசையே தசை !

அன்னுத்தைகள் ஆட்சி!

பம்பாய் மாகாண கவர்ன்மெண்டு பெரும்பாலும் ஐரோப்பிய ஸிவிலியன்களால் ஆட்சி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆட்சியில் வருஷந்தோறும் வரவு செலவு திட்டத்தில் பொத்தல் விழுந்து கொண்டிருப்பதைக் காண ஆச்சரியமாயிருக்கிறது. ஏற்கனவே இந்த பம்பாய் கவர்ன்மெண்டு பட்டிருக்கும் சில்லரைக் கடன்களுக்கோ குறைவில்லை. இந்த வருஷத்து வரவு செலவு திட்டத்திலும் 90 லக்ஷம் பொத்தல் விழுமென எதிர் பார்க்கிறார்களாம். இப்படி வருஷா வருஷம் வரவுக்குமேல் செலவு ஏற்படுவதற்கு அந்த மாகாணத்தை ஆளும் ஐரோப்பிய நிபுணர்களைக் காரணமாகச் சொல்வதா? அல்லது வேறெதைச் சொல்வது?

விமானச் செலவு விழுங்கல்

இப்போது சில காலமாக இந்திய கவர்ன்மெண்டுக்கு 'பறவை' மோகம் பிடித்திருக்கிறது. இராணுவத்திலாகட்டும், தபால் இலாகாவிலாகட்டும், வைஸ்ராயின் பிரயாணத்துக்காகட்டும் எல்லாவற்றிலும் ஆகாய விமானத்தை நுழைத்திருக்கின்றனர். இவ்வாறு பஞ்ச காலத்தில் புதிய முறைகளில் நுழைவதால் ஊராரிடமிருந்து வசூலித்த வரிப் பணத்தில் அதிகச் செலவு ஆகின்றதே என்பதை ஆலோசிக்கக் கூட சர்க்காருக்கு நேரமில்லை. டெல்லியில் வரவு செலவு நிரந்தரக் கமிட்டியார் பம்பாய் ஜுஹூவில் ஆகாய விமான நிலையம் ஒன்றைக் கட்டுவதற்காகவும் இதர செலவுகளுக்காகவும் லக்ஷம் ரூபாய்க்கு மேல் மான்யம் தந்தார்கள். இப்போது அதற்கு மேலே 52 ஆயிரம் ரூபா அதிகமாகத் தரப் போகின்றார்களாம். அதைத் தவிர சாதாரண ஆகாய விமானிகளின் உதவிக்கான செலவுகளுக்காக சுமார் 62 ஆயிரம் ரூபாய் மான்யம் தந்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஊரார் 'பணமோ பணம்' என்று பறக்கும் போதா இந்த 'பறக்கும்' செலவுகளில் சர்க்கார் இறங்க வேண்டும். இந்த ஆகாய விமான கலாட்டா வந்ததால் "அதோ பார் ஏரோப்ளேன் !" என்று பொது ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு என்ன பயன்?

'மாஜி' ஜகத் குரு

பிரும்மஞான சங்கத்தின் கொழுந்தென்றும், நக்ஷத்திர சங்கத்தின் தலைவனென்றும், கல்கியவதாரமென்றும், மைத்ரேய அம்சம் பெற்றவனென்றும் பற்பல விதமாக வர்ணிக்கப்பட்ட அடையாறு 'ஜகத்குரு' சென்னையில் அவிழ்த்த மூட்டை போதாதென்று அஹமதாபாத்திலும் போய் அவிழ்த்திருக்கிறார். "கோயில்கள் உலகில் இருக்கக் கூடாது. உயிரற்ற விக்ரகங்களை விட உயிருள்ள மனிதனையே நான் மதிப்பேன். வகுப்புப் பிரிவினைகளால் தீண்டாமை ஏற்படுகின்றது. தீண்டத் தக்கவன், தீண்டத் தகாதவன் என்ற பிரிவினையை 'சுத்தம்' என்ற கருவியால் தான் நிர்ணயிக்கலாம். சுத்தமா யிருப்பவனுக்கு ஜாதி தேவையில்லை" என்று கூறியிருக்கிறார். இந்த மாதிரி வேதாந்த ஞானங்கள் எல்லா இந்தியனோடும் பிறந்திருக்கிறது என்பதையும், எதையும் புதிதாய் இந்த கிருஷ்ணமூர்த்தி சொல்லிவிட வில்லை யென்பதையும் இளைஞர்கள் அறிந்து கொள்ளவேண்டும். திடீரென்று நமது கோயில்களின்மீது இந்த ஜகத் குருவுக்கு வந்துள்ள சீற்றத்திற்கு காரண மென்னவோ விளங்கவில்லை. இந்த 'மகா புருஷனு'க்கு கோயிலில் நம்பிக்கை யில்லாவிடில் அவர் மட்டில் அந்த அபிப்பிராயத்தை வைத்துக் கொள்ளட்டும். 'ஹரி ஜனங்களுக்குக் கோயில் பிரவேசம் தருவது' என்ற இயக்கம் நாட்டில் நடை பெற்றுக்கொண்டிருக்கும்போது இந்த 'அவதாரம்' கண்டபடி கோயில்களைத் தாக்கிக் கொண்டு ஊரூராய்த் திரிவதில் இரகஸ்ய நோக்கம் ஏதேனு முண்டோ என்று சமுசயிக்க வேண்டி யிருக்கிறது. ஆகவே இந்த நவீன அவதாரத்திடம் மக்கள் உஷாரா யிருக்கட்டும்.

ஐயங்காரே கேளும் !

மகாத்மா மணி வாக்கு

[தற்போது நடந்து வரும் கோயில் பிரவேச இயக்கம் காந்தியினாலும், அவரை சேர்ந்தவர்களினாலும் நடத்தப்பட்டு வரும் ராஜீய சூழ்ச்சி என்றும், ஹரி ஜனங்களை ஏமாற்றி அவர்களைக் காங்கிரஸில் சேர்த்துக் கொண்டு சர்க்காரை ஏகமுகமாக எதிர்ப்பதற்காகவே அது நடந்து வருவதாகவும் மாஜி நீதிபதி வி. வி. ஸ்ரீனிவாஸய்யங்கார் சென்னைக் கூட்டமொன்றில் பேசினார். இந்தக் குறும்புப் பிரசாரத்தை எதிர்த்து மகாத்மாஜி பின்வருமாறு அய்யங்காருக்கு ஓர் அழைப்பு விடுத்திருக்கிறார்:]

" மாஜி நீதிபதியான ஒருவர் இவ்வளவு பொறுப்பற்ற தன்மையில் பேசியிருப்பது கண்டு எனக்கு ஆச்சரியம் ஒரு புறமும், வருத்தம் மற்றொரு புறமும் ஏற்படுகின்றது. இயக்கத்தைப் பற்றி அவர் நன்கு ஆராய்ச்சி செய்திருந்தால் எனக்கு ராஜீயம் என்றால் இன்னதெனத் தெரிவதற்கு முன்னமேயே நான் தீண்டாமையை ஒழிக்கக் கங்கணம் பூண்டேன் என்பதை அவர் அறிந்திருக்கலாம்.

"மத உணர்ச்சியில்லாமல் ராஜீய நோக்கத்தை நான் முக்கியமாகக் கொண்டிருந்தால் எனது திட்டத்தில் 'கோயில் பிரவேசம்' இடம் பெற்றேயிராது. ஹரி ஜனங்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்காக மட்டும் உழைக்க நான் முற்பட்டிருப்பேன். ஆனால் கோயில் பிரவேச மில்லாமல் தீண்டாமையை ஒழிக்க முடியாது என்பது எனது நம்பிக்கை.

" தாங்கள் ஹரி ஜனங்களைக் கொடுமையாக நடத்த விரும்பவில்லை யென்றும், அவர்கள் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்காக உழைக்கத் தயாராக விருப்பதாகவும் சொல்லும் ஐயங்காருக்கும், மற்ற ஸனாதனிகளுக்கும் ஒரு யோசனை சொல்கிறேன். அவர்கள் ஹரி ஜன சேவா சங்கத்தில் சேர்ந்து வேலை செய்யட்டும்; அதற்குப் பொருளுதவி செய்யட்டும். கோயில் பிரவேச விஷயத்தை எனக்கும், என் கருத்து கொண்டவர்களுக்கும் விட்டு விடட்டும். மேற்படி ஸ்தாபனத்தில் வெகு சில காங்கிரஸ்காரரே யிருக்கின்றனர். பிரபல லிபரல்களெல்லாம் அதிலிருக்கின்றனர். இது பிடிக்கவில்லை யென்றால் அவர்கள் தாங்களே தனியாக ஒரு சேவா சங்கத்தை யேற்படுத்தி, ஹரி ஜன ஊழியம் புரியட்டும். பாமர மக்களைப் பற்றிய ஒருஇயக்கத்தில் எவ்வித சூழ்ச்சியும் பலிக்காது என்பதை ஐயங்கார் அறிவாராக! யோக்யமாக உழைத்தால் தான் வெற்றி கிட்டும்.

"எனக்கு சாஸ்திரங்களில் நம்பிக்கையே யில்லை என்கிறார் ஐயங்கார். இப்படி நான் எங்கேயாவது சொல்லி யிருக்கிறேன் என்பதற்கு அவர் ஆதாரம் காட்டுவாரா? என்னுடைய கட்டுரைகளிலிருந்து அங்கு மிங்கும் சில வாக்கியங்களைப் பிடுங்கிக் கொண்டு குதர்க்கம் செய்து, என்மீது கண்டபடி குற்றங்களை வீசி எறியும் அவரையும், அவரைப் போன்றவர்களையும் ஒரு கேள்வி கேட்கிறேன். இந்த மாதிரி யெல்லாம் செய்வதால், அவர்களால் ஸனாதன தர்மத்தைக் காக்க முடியுமா? எனக்குச் சாஸ்திரங்களில் நம்பிக்கை யில்லை யென்பது உண்மையானால் நான் ஒருக்காலும் அதை ஒளிக்கவே மாட்டேன். தெளிவாகச் சொல்லி விடுவேன்.

"ஹிந்து மதம் மூலமாகவே நான் இன்பமும், சாந்தமும் காண விரும்புகிறேன். இந்த உலகில் அதைத் தவிர எனக்கு வேறென்ன வேண்டும்? கீதை, வேதங்கள், உபநிஷத்துக்கள், பாகவதம், மகா பாரதம் இவற்றைக் கொண்டு நான் கடைந்து பார்த்துள்ள ஹிந்து மதம் எல்லா உயிர்களும் ஒன்றே என எனக்குப் போதிக்கின்றது. ஆண்டவன் கண் முன்னர் உயர்வு, தாழ்வே கிடையாது. வெறுமனே வாதம் செய்வது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவே யில்லை. ஆனால் இதைவிட எனக்கு அசத்தியமும், அசுத்தமும் அதிகமாகப் பிடிக்க வில்லை. அவற்றை எதிர்த்துப் போராடி வருகின்ற என்னுடன் சேர்ந்து கொள்ளும்படி ஸனாதனிகளை நான் அறை கூவி அழைக்கின்றேன்."

தரித்திரமே காரணம்

கல்கத்தா "காபிடல்" பத்திரிகையின் மாஜி ஆசிரியரான மிஸ்டர் பிராக், எழுதுவதாவது :

"ஏழ்மையாகக் கிடக்கும் இந்தியா சமீபத்திய தங்க ஏற்றுமதி காரணமாக இன்னும் அதிக ஏழ்மையாகிக் கொண்டு வருகின்றது. இந்தியப் பெண்மணிகள் தங்கள் வீடுகளில் எங்கெல்லாமோ சாமர்த்தியமாக மறைத்து வைத்திருந்த தங்க நகைகளை யெல்லாம் விற்றுவிடுவதற்குக் காரணம் இந்தியாவின் தாங்கமுடியாத தரித்திரமேயன்றி வேறொன்றுமில்லை."

விமோசனத்திற்கு வழி

"இது தான் சமயம். ஹரிஜனங்களே! செத்த பிணங்களைத் தின்னும் வழக்கத்தை இன்றிருந்து விட்டு விடுங்கள். கள் குடிப்பதை ஒழித்துப் போடுங்கள். பிரதி தினமும் குளித்துச் சுத்தமா யிருக்கப் பழகுங்கள். உங்களில் தோட்டி வேலை செய்கிறவர்களுக்கு ஓர் வார்த்தை. வேலை முடிந்ததும் சுத்தமாக ஸ்னானம் செய்து சுத்தமான ஆடை உடுத்திக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளை யெல்லாம் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புங்கள். உங்களுக்குள்ளேயே சிலரை நீங்கள் 'தீண்டாதார்' என்று ஒதுக்கி வைக்கும் வழக்கத்தை ஒழித்து விடுங்கள்" என்று மகாத்மா காந்தி தாழ்த்தப்பட்ட மக்களுக் கென்று ஓர் செய்தி விடுத்திருக்கிறார். ஹரிஜனங்களுக்காக நடத்தப்படும் ஓர் பத்திரிகைக்கு முதல் கட்டுரையாக காந்திஜி இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றார்.

தென்னிந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தச் செய்தி பரவ வேண்டும். தமிழ்நாட்டு ஹரிஜனங்களுக்கோ படிப்பும் கிடையாது. பத்திரிகை கிடைக்க வசதியும் இல்லை. ஹரிஜனங்களுக் கென்று இம் மாகாணத்தில் தனிப் பத்திரிகையும் இல்லை. ஆகவே இச் செய்தியை சேரிகளில் பிரசாரம் செய்யும் பொறுப்பு மேல் ஜாதியார்களைச் சேர்ந்தது.

'ஆலயப் பிரவேசம்' என்ற விஷயத்தில் மேல் ஜாதியார்களுக்குள் இருக்கும் இருவித அபிப்பிராயம் ஓர் புற மிருக்கட்டும். இந்த நல்ல செய்தியை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அறிவுறுத்தும் பொறுப்பு இரு கக்ஷிக்காரர்களும் செய்ய வேண்டிய கடமையாகும்.

மடாதிபதிகள், மதப் பித்தர்கள், சீர்திருத்தக்காரர்கள் எல்லோருக்கும் பொதுவான வேலை நம் முன் கிடக்கின்றது. ஏதாவது வீண் வம்பு அளந்து கொண்டு, அதிக முக்கியமான இந்த சேரிப் பிரசார வேலையில் ஈடு படாமல் பொழுது போக்குகின்றவன் 'ஹிந்து' வல்ல. அவன் விதண்டாவாதி. நமது ஸனாதன மதத்துக்கே துரோக மிழைப்பவ னென்றே சொல்ல வேண்டும். ஏழு கோடி ஹிந்துக்களைச் சீர்திருத்தம் செய்வதைக் காட்டிலும் புனிதமான ஊழியம் வேறென்ன விருக்கிறது? சீர்திருத்தக்காரர்களே, ஆகம பண்டிதர்களே, மதாசிரியர்களே, உடனே இந்த வேலையில் உழையுங்கள்.

சில தமாஷ் கதைகள்

சில வருஷங்களுக்கு முன்னே தென்னிந்தியாவில் தான் கண்ட அதிசயத்தை ஒருவர் அமிருத பஜார் பத்திரிகையில் எழுதி யிருக்கிறார்: "ஒரு கச்சேரியில் வழக்கு நடந்துகொண்டிருந்தது. அந்த வழக்கில் சாக்ஷியாக வந்தவன் ஓர் பறையன். வழக்கில் சம்பந்தப்பட்ட இதரர்களனைவரும் 'ஆசாரம்' மிகுந்த மேல் ஜாதிக்காரர்கள். ஆகவே கூப்பிடு தூரத்தில் கோர்ட்டுக்கு வெளியே அவனை நிறுத்தி வைத்து உரத்த தொண்டையில் கேள்விகள் கேட்டனர். அவனும் பலக்க பதில்களைக் கூவிக் கொண்டிருந்தான். இப்படி படுமோசமாக இந்தத் தீண்டாமை தென்னிந்தியாவில் இருந்தது."

இதை விடச் சில ருசிகரமான சம்பவங்களையும் நாம் கேள்விப் படுகின்றோம். ஒரு சிறிய கிராமத்தில் ஒரு மேல் ஜாதியாரின் வீடு: அதில் ஒரு நாள் இரவு யாரோ ஒருவன் திருட வந்தான். ஏதேதோ சாமான்களை எடுத்துக் கொண்டு அவன் கொல்லை வாயிலைக் கடக்க முயற்சிக்கும்போது வீட்டுக்காரர் விழித்துக் கொண்டார். சொத்து போகிறதே யென்று திருடனைத் தொடர்ந்தார். திருடன் ஓட, அவர் ஓட, வழியே ஒருவர் குறுக்கிட்டார். "அவன் பறையன் போலேருக்கு" என்று வந்தவர் ஒரு பொய் கூறினாராம். வீட்டுக்காரருக்கு என்ன செய்வ தென்பது தெரியவில்லை. தர்ம சங்கடமா யிருந்தது. சொத்துப் போகிறதை யெண்ணும் போது தீண்டாமையாவது, மண்ணாங் கட்டியாவது என்று தோன்றுகிறது. போய்ப் பிடித்துக் கொண்டால் ஊரான் ஒருவன் பார்த்துவிட்டானாதலால் பிராயச்சித்தம் பண்ணிக் கொண்டே தீரவேண்டு மென்பார்கள். பத்து ரூபா செலவாகும். என்ன செய்வது என்று அவர் சிந்தித்துக் கொண்டே யிருந்ததால் திருடினவன் தலை மறைந்து போயிற்று.

மற்றொரு கதை பின்வருமாறு:—

தெற்கு நாட்டினர் ஒருவர் பண்டரிபுரத்திற்குப்போய் அருகில் ஒரு கிராமத்தோப்பில் குடும்பத்தோடு தங்கியிருந்தார். கடைக்குப் போய் சர்க்கரை வாங்கிக் கொண்டு திரும்பி வந்தார். சாமான் வாங்கி வந்த பிறகு அந்தக் கடை ஒரு 'சேரி'க் கடை யென்றும், தான் வாங்கிய கடைக்காரன் ஒரு தீண்டத் தகாதவ னென்றும் தெரிந்தது. "அடியே! அந்த சர்க்கரை யெழவை தண்ணீரில் நன்றாய் அலம்பி விட்டு உபயோகி" என்று சொன்னாராம்.

யானையை எதிர்க்கும் எலிகள்

காற்றைக் கடுதாசி எதிர்த்து நின்றால் எப்படி யிருக்கும்? அப்படித் தானிருக்கிறது ஒரு சில யதாபூர்விகள் பண்டித மாளவியாவை எதிர்ப்பது. இந்தியாவில் உத்தம வைதீகர் யாராவது இருக்கிறாரென்றால் அவர் மாளவியாஜி தான். அவருடைய தினசரி அனுஷ்டானங்களையும், கிருத்தியங்களையும், பூஜை, ஆராதனைகளையும், வேத சாஸ்திரப் பாண்டித்தியத்தையும், பரிசுத்த வாழ்க்கையையும் கண்டு இந்த லொட லொட்டை யதாபூர்விகள் காத தூரம் ஓடவேண்டி யிருக்க அவரிடம் போய் கை வரிசை காட்டுகிறார்கள். இதைப் பற்றி திருச்சியில் ஸ்ரீயுத தேவதாஸ் காந்தி சொல்லிய வார்த்தைகள் வெகு அழகாக விருக்கின்றன: "வைதீகர்கள் மகாத்மாஜியைத் தங்கள் முழு பலத்துடன் எதிர்ப்பதன் அர்த்தத்தை நான் அறிந்து கொள்ள முடியும். ஆனால் மாளவியாஜியை எதிர்ப்பவர்கள் அவரை ஜெயிக்கவே முடியாது. ஹிந்து மத விஷயங்களில் அநேகர்களுக்கு அவரை யணுகவாவது யோக்யதை யுண்டா? அவர் பரம வைதீகர். இருந்தாலும் ஒரு ஹரிஜனனைப் பார்த்து விட்டால், அவர் அவனைக் கட்டித் தழுவுகிறார்; சகோதர பாவங் கொள்ளுகிறார். கடந்த 50 வருஷங்களாக ஹிந்து மதப் புனருத்தாரணத்திற்காகத் தமது உயிரையே அர்ப்பணித்து ஊழியம் புரிந்து வரும் மாளவியாவையா எதிர்ப்பது?"

மாளவியாஜி சகல ஸனாதன ஹிந்துக்களின் அபிப்பிராயத்தையும் அறிவதற்காக அலகாபாத்தில் ஒரு மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்தார். அகில இந்தியாவிலுள்ள பலருக்கும் அழைப்பு அனுப்பினார். தெற்கே யுள்ள சில அதன ப்ரசங்கிகள் "இந்த ஸனாதன மகாநாட்டுக்கு வரமாட்டோம்" என்று தந்தி தட்டி யிருக்கின்றனவாம். தெற்கு நாட்டு யதாபூர்விகள் நிலாப் பூச்சி நிழல் பூச்சி ஆடுகின்றார்களா? அல்லது குறும்புத்தனம் தலை மீறிப் போய்விட்டதா?

பிரயாகையில் நடக்கும் ஸனாதன மகாநாட்டிலும் விஷமிகள் வாலாட்டினர். மாளவியாஜியின் விஞ்ஞாபனம் எதிரிகளின் இதயத்தையும் தைத்ததாகத் தெரிகிறது. "நானா? எந்தக் கக்ஷியைச் சேர்ந்தவன்? எனக்கு எந்தக் கக்ஷியும் கிடையாதே. நான் பகவானின், ராமபிரானின் கக்ஷியில் தானே நிற்கின்றேன்" என்று பண்டிதர் கூறிய உணர்ச்சிச் சொற்கள் யாரைத் தான் தைத்திராது?

பொய் வெடித்து விட்டது

ஷாஜஹான் பாதுஷா தனது காதலி மும்தாஜ் என்பவளின் ஞாபகார்த்தமாக ஆக்ராவில் அழகு மிகுந்த தாஜ் மகாலைக் கட்டினான். "அந்தக் கட்டிடம் ஒரு இத்தாலியனால் கட்டப்பட்டதாம்" என்று மான்ரிக் என்ற ஒரு இத்தாலியப் பாதிரி ஓர் பொய்யை நுழைத்து புத்தகம் போட்டு விட்டான். அந்தப் பொய்யை ஆர்தர் உப்ஹம் போப் என்ற சரித்திர ஞானி வெட்ட வெளிச்சமாக்கி விட்டார். "உலகில் எது சிறந்ததானாலும் உடனே அது ஐரோப்பியர்களிட மிருந்தே உதித்ததென்று வறட்டு ஜம்பம் கூறிக் கொள்ளும் ஐரோப்பியரில் சிலருடைய மனோபாவம் வெறுக்கத்தக்கது" என்று மிஸ்டர் போப் குறிப்பிட்டிருக்கிறார்.

அது மட்டுமா? இந்தியாவில் ரயில் யார் போட்டது? கிராமபோன் யார் செய்தது? இந்தியாவில் ரேடியோ, எலெக்டிரிக் விளக்கு எல்லாம் தந்தது யார்? "நாங்கள்தான்" என்று சில ஐரோப்பியர்கள் கூறுவதுண்டு. ஐரோப்பாவுக்கே இந்த ரேடியோவும், கிராமபோனும் பிற நாட்டினின்று இரவலாக வந்தவை யென்பதை ஷை ஐரோப்பியர்கள் மறந்து விட்டார்கள் போலும். உலகில் எந்த பாகத்தில் எதைக் கண்டு பிடித்தாலும் உடனே அது உலகு முழுவதும் தானாகவே பரவ ஆரம்பித்து விடுமென்பது விதி. அந்த விதியை ஒட்டியே இன்றைக்கு ஜப்பான் நாட்டிலும் எவ்வளவோ நவீனக் கருவிகள் பரவி யிருக்கின்றன. அங்கு ஆங்கிலேயரோ, எந்த ஐரோப்பியரோ அரசாட்சி செய்து நவீனக் கருவிகளை நுழைத்ததாகச் சொன்னால் ஜப்பான்காரன் சிரிப்பான். இந்தியாவைப் பற்றி சில குண்டுணி ஐரோப்பியர் கொண்டுள்ள தப்பெண்ணங்கள் விலக வேண்டு மென்பதே நமது ஆசை.

மார்ச்சு மீ இரண்டாம் வாரத்தில் இந்திய தேசிய காங்கிரஸை நடத்துவதற்கு மதன் மோஹன் மாளவியா பிரயத்தனங்கள் செய்து வருகிறாரென்று தெரிகிறது. இந்தக் காங்கிரஸ் காசியில் நடக்கலா மென்று ஊகிக்கப்படுகிறது. இந்த 'காங்கிரஸ்' சம்பந்தமாக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களோ?

நமது கிளிஞ்சல் குவியல்

'சுதந்திர தின'த்தன்று சென்னையில் கைதியானவர் 85; பம்பாயில் ஹர்த்தால், தடியடி, சிலர் கைதி; டெல்லியில் 13 தொண்டர்களும் 3 சந்யாசிகளும் கைதி; காசியில் 15 நபரில் ஒன்பது பேர் பெண்கள்; லக்ஷ்மணபுரியில் 7 பேர்: அலகாபாத்தில் 8 பேர்; அஹமதாபாத்தில் 5 பெண்களும் 9 ஆண்களும்; லாகூரிலும் இரண்டு கோஷ்டி கைதி; மீரத்தில் ஸ்ரீ பரமேஸ்வரி தேவியுள்பட 10 பேர் கைதி; கல்கத்தாவில் கைதியான சுமார் 200 பேர்களுள் 50 ஸ்திரீகளாம்; கள்ளிக்கோட்டையில் 44 பேர்கள் கைதி. ஜபல்பூரில் இதுவரை இரு முறை சிறை சென்ற செல்வவந்தர் ஸேத் கோவிந்ததாஸ் 20 ஆயிரம் பேரடங்கிய கூட்டத்தை நடத்தியதற்காகக் கைதியானார்; பாட்னாவைச் சுற்றி ராஜேந்திர பாபுவின் மனைவியாரும், சகோதரியாரும், மற்றும் 3 ஸ்திரீகளும், 120 தொண்டர்களும் கைதியாயினராம். மதுரை, விருதுநகர், கண்ணனூர் முதலிய விடங்களினின்றும் செய்திகள் கிடைத்துளது. சென்னையில் கைதியானவரில் பலர் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

மறுநாளிலிருந்து சென்னையில் மறியல், ஊர்வலம் முதலியவை காங்கிரஸ் தொண்டர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. 27உ-யன்று ஜூலை ஊர்வலத்தில் பலமான அடி. பச்சையப்பன் கல்லூரியில் 10 தொண்டர்கள் கொடி போட்டதற்காகக் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். பிரஸிடென்ஸி காலேஜ் ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் 'புரட்சி நீடூழி வாழ்க' என்ற சத்தமிடப் பட்டுப் பட்டாஸ்கள் வெடிக்கப்பட்டன. மூர்மார்க்கெட்டுக் கருகில் கொடி வணக்கம் செய்ததாகக் கைது செய்து விடப்பட்டனர். 28உ-யன்று மீண்டும் அதே 40 தொண்டர்கள் கைதியாயினர்.

கல்கத்தாவில் 15 காங்கிரஸ் தொண்டர்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனராம்.

நியூ டெல்லியில் 'அர்ஜுனன்' என்ற பத்திரிகாலயத்தில் நுழைந்து போலீசார் சில பிளாக்குகளைக் கைப்பற்றிச் சென்றனர்.

அயர்லாந்து தேர்தலில் எமன் திவேலராவின் கக்ஷிக்குப் பெரும்பான்மை வெற்றி.

காந்திஜியின் வலது கை வலி சொஸ்தமாகி விட்டபடியால் அவர் வழக்கம் போல பிரதி தினமும் நூல் நூற்க ஆரம்பித்து விட்டார்.

ரங்கய்யர் கொடுத்துள்ள ஆலயப் பிரவேச மசோதாவை வைஸ்ராய் தனிக் கமிட்டியின் ஆலோசனைக்கு விடுவாரென்ற வதந்தி டெல்லியில் உலாவுகின்றது. அவ்வாறு வழா வழாப் பண்ணுவதை தாம் சட்ட சபையில் எதிர்க்கப் போவதாக ரங்கய்யர் அறிவிக்கின்றார்.

அலகாபாத்தில் நடந்த அகில இந்திய ஸனாதன மகா நாட்டில் தீண்டாமையை விலக்கியே தீரவேண்டு மென்றும், ஹரிஜனங்களுக்கு ஆலய தரிசனம் செய்விக்க வேண்டிய தவசியமென்றும் தீர்மானங்கள் நிறைவேறி விட்டன.

மேலைக்கொட்டையூர் சேரியில் ஹரிஜனப் பிள்ளைகளுக்கு தஞ்சை ஜில்லா தி. வி.சங்கத்தாரால் ஸ்லேட்டுகள், புத்தகங்கள், பரிசளிக்கப்பட்டன.

போதனூருக் கடுத்த நஞ்சுண்டவரத்தில் ஹரிஜனப் பள்ளிக்கூடமொன்று ஏற்பட்டுளது. கிராமவாசிகள் உதவுக!

ஹைதராபாத்தைச் சேர்ந்த ராஜா பகதூர் மன்விலால் மோடிலால் என்பவர் ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக 3 லக்ஷம் ரூபாய் தர்மம் செய்திருக்கிறார். வீடுகளுக்குள் எலிகள் நுழைய முடியாதபடி வீடுகள் கட்டப்படுமாம்.

ஆமதாபாத்தில் 'சௌராஷ்டிர மித்ரா' என்ற பத்திரிகைக்கு 1000 ரூ. ஜாமீன் கேட்கப்பட்டுளது.

பூனா முனிஸிபாலிட்டியைச் சேர்ந்த கவுன்சிலர்கள் சில கட்டிட கண்டிராக்டர்களிடம் லஞ்சம் வாங்கியதாகக் கண்டு பிடிக்கப்பட்டு தலா 18 மாதக் கடுங்காவல் தண்டனைக்கும், தலா 300 ரூபா அபராதத்துக்கும் ஆளாகியிருக்கின்றனர்.

ஒவ்வொரு மாகாண சட்ட சபையிலும் ஒரோர் விதமான அவசரச் சட்டம் சிருட்டிக்கப்பட்டிருக்கிறதல்லவா? அந்த சட்டங்களின் சக்தியை அதிகரிப்பதற்காக டெல்லி சட்ட சபையில் ஒரு உப மசோதாவை சர்க்கார் கொண்டு வரப் போகிறார்களாம்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras,